# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**11,734 — 1959 අප්‍රේල් 30 වැනි බ්‍රහස්පතින්ද — 30.4.1959**

11,734 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு சித்திரை மாதம் 30 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனத்துறை

**தள்ளுவண்டிகள் (Wheelbarrows) கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள்**

இருநூறு தள்ளுவண்டிகள் கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1959 ம் ஞூ ஜூன் மாதம் 2 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை பத்து மணி வரைக்கும் கேள்விப்பத்திரச் சபாநாயகர், காணி, நில அபிவிருத்தி அமைச்சு, தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு, அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வெற்றுக் கேள்வித்தாள்களைப் பிரதான பொறிஞர், இயந்திரக் கிளை, நீர்ப்பாசனத்துறை, இரத்மலானை, அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். 1959 ம் ஞூ மே மாதம் 29 ந் திகதி வெள்ளிக்கிழமை வரை வழங்கப்படும் இவ் வெற்றுக் கேள்வித் தாள்கள், கொழும்புக்குப் புறம்பான எந்தக் கச்சேரியிலேனும் அல்லது பிரதான பொறிஞர் அலுவலகம், இயந்திரக் கிளை, நீர்ப்பாசனத்துறை, இரத்மலானையில் இருபத்தைந்து ரூபா (ரூ. 25) கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டுச் சமர்ப்பிப்போருக்கு மட்டுமே கிடைக்கும்.

ஏனைய விபரங்களை பிரதான பொறிஞர், இயந்திரக் கிளை, நீர்ப்பாசனத் துறை, இரத்மலானை, அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ரீ. பீ. ஈ. செனெவிரத்ன,
நீர்ப்பாசனத்துறை அதிபருக்காக.

நீர்ப்பாசனத்துறை,
தபாற் பெட்டி இல. 500, கொழும்பு,
1959 ம் ஞூ எப்ரல் மீ 24 ந் உ.

---

## வளிமண்டல ஆராய்ச்சிப் பகுதி

**ஜலவாயு தயாரிப்பதற்கு வேண்டிய அலுமினியச் சீவல்கள் விநியோகத்திற்கான விலை விபரம்**

வளிமண்டல ஆராய்ச்சிப் பகுதிக்கு 40 அந்தர் அலுமினியச் சீவல் தேவைப்படுகிறது. இது கடைசல் சீவல்கள், வெட்டித் தள்ளிய சிறு துண்டுகள், மெல்லிய தகடுகள் ஆகியன கொண்டதாய் தகரக் கொல்லர் கத்தரிக்கோலால் வெட்டக்கூடியனவான மெல்லிய தகடுகளாக விநியோகிப்பதானல் கடதாசியும் மற்றும் பிற பொருள்களும் நீக்கியே விநியோகிக்க வேண்டும்.

1959 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இவ்விநியோகம் தேவைப்படுகிறது. விநியோகஞ் செய்ய உத்தேசிப்போர் மாதிரிகளுடன் தங்கள் கேள்விப் பத்திரங்களை உறையிலிட்டு அரக்கு மெழுகு ஊற்றி முத்திரையிட்டு கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு 1959 ம் ஆண்டு மே மாதம் 29 ம் திகதி 12 மணிக்கு முன்னர் சேரத்தக்கதாக அனுப்ப வேண்டும். தங்கள் கேள்விப்பத்திரங்களில் குறிப்பிடும் விலை ஒரு அந்தருக்கானதும் சாக்குகளில் இக்கந்தோரில் சேர்ப்பிப்பதற்கானதுமான விலையாயிருத்தல் வேண்டும்.

டி. யே. யயசிங்க,
பதில் அதிபதி,
வளிமண்டல ஆராய்ச்சிப் பகுதி

வளிமண்டல ஆராய்ச்சிப் பகுதி,
புல்லர்ஸ் வீதி,
கொழும்பு 7,
1959 ம் ஞூ ஏப்ரில் மீ 21 ந் உ.

---

## கடற்றொழிற் பகுதி

**மன்னூர் மாவட்டத்தில் பனங்கட்டிக்கொட்டில், மலசலகூடங்கள் இணைக்கப் பெற்ற 18 கடற்றொழிலாளர் வீடுகளையும் 1 கிணற்றையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள்**

மன்னூர் மாவட்டத்தில் பனங்கட்டிக் கொட்டில், மலசலகூடங்கள் இணைக்கப் பெற்ற 18 கடற்றொழிலாளர் வீடுகளையும் 1 கிணற்றையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள், செனற் சதுக்கம், கொழும்பு 1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவரவர்களால் 1959 ம் ஆண்டு மே மாதம் 27 ந் திகதி புதன் கிழமை நண்பகல் பன்னிரண்டு மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிட வேலைகளுக்காக ரூபா 50,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு மே மாதம் 25 ந் திகதி பிற்பகல் 3 மணி வரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்பிற்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா 100 வைப்புப் பணமாகக் கட்டி, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது இத் தொகைக்காய பற்றுச் சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டீ. ரீ. ஈ. ஏ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு 3,
1959 ம் ஞூ எப்ரல் மீ 24 ந் உ.